**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம்,**

**ஈரோடு.**

**STC.No.8287/2014**

Date. 29.10.2025

பெயர்: ஆறுமுகம்

வழக்கு சாட்சி. பு.த.சா. 1

(மனுவின் பேரில் புகார்தாரர் சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது)

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 3ம் எதிரியாக குறிப்பிடப்பட்டுள்ள வேளாங்கன்னி அச்சகத்தின் உரிமையாளர் யார் என்று எனது அறிவிப்பிலோ, புகாரிலோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்திலும், மேற்படி அச்சகத்தின் உரிமையாளர் யார் என்று தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையை சத்தியபிரமாண வாக்குமூலத்தின் மூலம் அளித்தது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

2. கடந்த 31.10.2014 இல் நான் அளித்த சத்யபிரமான வாக்குமூலத்தில் 01 முதல் 05 வரையிலான எதிர்மனுதாரர்கள் போர் முரசு பத்திரிகையில் என்னைப் பற்றி தவறாக செய்தியை வெளியிட்டுள்ளார்கள் என்று என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விவரம் பொய் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்கள் பொய் என்பதால் தான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ஐந்தாம் எதிர்மனுதாரரை விடுவித்துள்ளது என்றால் சரியல்ல. 01 முதல் 03 வரையிலான எதிரிகளுக்கு முறையாக அறிவிப்பு சார்பு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் நான் கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் வருமான வரி செலுத்தும் நபர் என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. என்னிடம் இரண்டு பேருந்துகள் மற்றும் 22 சிற்றுந்துகள் உள்ளதாக அறிவிப்பில் கூறியுள்ள நிலையில் அதனை புகாரில் குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றால் சொல்லி உள்ளேன். சத்தியபிரமான வாக்குமூலத்தில் TN 33 PC 1 மற்றும் TN

33 7888 போன்ற சொகுசு கார்கள் என்னிடம் உள்ளதாக தெரிவித்துள்ள நிலையில், அதனை என்னுடைய முதல் விசாரணையில் தெரிவிக்கவில்லை என்றால் மேற்படி எண்களில் சொகுசு கார்கள் இருப்பதாக என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை.

4. போர் முரசு பத்திரிகையானது சென்னையிலிருந்து 03வது எதிரியான வேளாங்கண்ணி அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டு தமிழகத்தின் எல்லா பகுதிகளிலும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்று என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ள நிலையில், மேற்படி சங்கதியை என்னுடைய பிரமாண வாக்கு மூலத்திலும் புகாரிலும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. பு.த.சா.ஆ. 1 ஆவணமானது 03வது எதிரியான வேளாங்கண்ணி அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டு தமிழகத்தின் எல்லா பகுதிகளிலும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பது பொய்யானதாகும் என்றால் சரியல்ல.

5. மூன்றாவது எதிரி தலைமறைவாக இருப்பதாக முதல் விசாரணையில் கூறியுள்ள நிலையில் மேற்படி மூன்றாவது எதிரியின் பெயரை குறிப்பிட்டு நான் தெரிவிக்காததால் தான் அவருக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல. சாட்சி முருகேசன் மற்றும் பழனிச்சாமி ஆகியோர்கள் என்னிடம் வந்து சந்தேகத்தோடு விசாரித்தனர் என்ற சங்கதியானது என்னுடைய அறிவிப்பிலும் மற்றும் புகாரிலும் குறிப்பாக தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

6. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு என்னுடைய மகனுக்கு பெண் பார்க்க சென்ற போது என்னைப் பற்றி வந்த பொய் செய்திகளை விசாரிக்க ஆரம்பித்தனர் என்று முதல் விசாரணையில் கூறியுள்ள நிலையில் அவ்வாறு எப்போது விசாரித்தனர் என்றால் கடந்த 2014ஆம் வருடம் புத்தகம் வெளியான நாளிலிருந்து தற்போது வரை அவ்வாறு விசாரிக்கிறார்கள். மேற்படி சங்கதியை என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் நான் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல சொல்லி உள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சம்பந்தியான டாக்டர் ராஜா என்னை சந்தேக கண்ணோடு விசாரித்தார் என்ற சங்கதியை என்னுடைய அறிவிப்பிலும், புகாரிலும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

(1ம் எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2025.10.29 17:22:45 -0800

Judicial Magistrate No.III,

Erode.